# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண். 28–2023**

**நாள்** 25.06.2025

**பெயர் : கோபாலகிருஷ்ணன்**

**PW: 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்குரையில் நான் தெரிவித்தவாறு எனது தகப்பனார் குருசாமி என்கிற குருசாமிபிள்ளை 10.08.1966 தனக்கு சொந்தமான சொத்து குறித்து ஒரு பதிவான ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அந்த உயில் சான்று ஆவணம் நகல். அந்த உயிலில் எனது தாயார் குழந்தையம்மாள் பக்கம் 3ல் அபிமானமனைவி என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோல் 8ம் பக்கத்தில் விடுப்பட்டுள்ள சொத்துக்கள் குறித்து அவரது மனைவி புனிதவதியம்மாள் தேகதேசமாக அனுபவித்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடபட்டுள்ளது. எனது தகப்பனார் 1967ல் இறந்துவிட்டார். புனிதவதியம்மாள் எனது தாயார் குழந்தையம்மாள் மீது காரைக்கால் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 342/1993 தாக்கல் செய்து நிரந்திர உறுத்துக்கட்டனை பரிகாரத்திற்கு தீரப்பு பெற்றுள்ளார். அந்த தீர்ப்புரையின் சான்று நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். அந்த வழக்கில் என் தாயார் குழந்தையம்மாள் குருசாமியின் சட்டப்படியான மனைவி என்ற கட்சி ஏற்றுக்கொள்ளபடவில்லை. பிறகு நான் குருசாமி என்கிற குருசாமிபிள்ளை மகன் என்கிற பெயரில் புனிதவதியம்மாள் மீது காரைக்கால் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் 126/1990 நிரத்திர உறுத்துக்கட்டனை பரிகாரத்திற்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கிலும் குருசாமி என்கிற குருசாமிபிள்ளையின் சட்டப்படியான மனைவி குழந்தையம்மாள் அல்ல என்றும், நான் குருசாமியின் சட்டபடியான வாரிசு அல்ல என்றும் கட்சி எழுப்பபட்டது. அந்த வழக்கு எனக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டு வழக்கை தள்ளுபடி செய்தது. நானும், என் தாயாரும் அந்த இரண்டு வழக்கை எதிர்த்து எந்த மேல்முறையீடும் செய்யவில்லை. ஆனால் நான் காரைக்கால் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் பாகபிரிவினை வழக்கில் அசல் வழக்கு 4/2000 தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டு அதனுடைய தீர்ப்புரை, தீர்ப்பாணை பி.சா.வா.ஆ.4 மற்றும் 5 ஆகும்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண் 1016/2003 தாக்கல் செய்திருந்தேன். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.6,7 ஆகும். அந்த வழக்குகளில் எனது தாயார் குழந்தையம்மாள் குருசாமி என்கிற குருசாமிப்பிள்ளையின் சட்டபடியான மனைவி அல்ல என்றும் , நான் சட்டப்படியான வாரிசு அல்ல என்றும் எனவே நான் கோரும் பாகபிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று உறுதி செய்யப்பட்டது. மேற்கண்ட பாகபிரிவினை வழக்கில் நான் குருசாமி என்கிற குருசாமிபிள்ளையின் சட்டப்படியான மகன் அல்ல என்ற போதிலும், இந்து திருமண சட்டத்தின் கீழ் எனது தாயார் குழந்தையம்மாள் குருசாமியின் இரண்டாவது மனைவி என்ற அடிப்படையில் நான் சட்டத்திற்கு புறம்பான மகன் என்ற நிலையில் குருசாமி என்கிற குருசாமிபிள்ளையின் தனிப்பட்ட சொத்தில் சட்டப்படியான பாகம் உண்டு என்று நான் கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தினை புனிதவதியம்மான் பி.வா.சா.ஆ.1 உயில் மூலம் கிடைக்கபெற்று அதை பொறுத்து அவர் 4ஆம் பிரிதிவாதிக்கு உயில் எழுதிவைத்துள்ளார் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. சௌவுந்தரவள்ளியம்மாள் அசல் வழக்கு எண் 4/2000 ல் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏற்பட்ட முதல் மேல் முறையீடு தீர்ப்பில் இந்த வழக்கு 1 மற்றும் 4 பிரதிவாதிகள் பெற்ற கிரய சாசனங்கள் செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்று சொன்னால் வழங்கிருக்கலாம் அதை பற்றி எனக்கு தெரியாது. புனிதவதியம்மாள் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் 1ஆம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்தில் 5ஆம் பிரதிவாதி கண்ணன் கிரயம் பெற்று அதில் வீடு கட்டியுள்ளார் அந்த சொத்து தான் வழக்குரையில் 2 வது ஐட்டமாக சொத்தாக காண்பிக்கபட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1ல் முதல் இண சொத்து எனக்கு எழுதி வைக்கபட்டுள்ளது. அந்த உயிலின் அடிப்படையில் அந்த சொத்துகள் எனக்கு உரிமையாக இருந்து வருகின்றன. இந்த வழக்கின் வழக்கிடை மனு எண் 1/2023 இந்த நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு நிலுவையில் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. எனவே சென்னை உயர் நீதிமன்தால் நான் குருசாமி என்கிற குருசாமிபிள்ளை சட்டப்படியான வாரிசு என்ற

கோரிக்கையானது நிராகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் வழக்கு சொத்துகளில் மீண்டும் பாகபிரிவினை பரிகாரம் கோருவதற்கு எனக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. குருசாமி என்கிற குருசாமிபிள்ளை அவருடைய சொத்துக்களை குறித்து பி.வா.சா.ஆ.1ல் உயில் எழுதி வைத்துள்ள காரணத்தினால் எனக்கு பாகபிரிவினை கோர உரிமை இல்லை என்று சொன்னால் நான் அந்த உயிலை ஏற்றுக்கொள்ளவில்லை. முன் வழக்குகளில் நான் உயிலை ஒப்புகொண்டுவிட்டு தற்போது இந்த வழக்கில் அதை ஆட்சேபணை செய்யக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் புதிததாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மதிப்பு சுமாராக 1 கோடி இருக்கலாம். வழக்கு சொத்தை எந்த பரிகாரமும் கேட்க உரிமையில்லை என்றும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல .